சத்யபாமா அறிவியல் மற்றும் தொழில்
நுட்பக்கல்வி நிறுவனம்
(நிகர்நிலை பல்கலைக்கழகம்)
*www.sathyabama.ac.in*
தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவையால் 'எ' தரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

## சத்யபாமா சட்ட பள்ளி

வழங்கும்

# கர்னல் முனைவர் ஜேப்பியார் முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப் போட்டி 2021

## இணைய வழி

**7 - அக்டோபர் - 2021**

**முதல்**

**9 - அக்டோபர் - 2021**

**பல்கலைக்கழகத்தின் முன்னாள் நிறுவனர்**
**மற்றும் அதிபர் கர்னல்.முனைவர் ஜேப்பியார்**
**M.A,B.L,Ph.D**
**ஆசீர்வாதத்துடன்**



## தலைமை புரவலர்கள்

**முனைவர் மரியசீனா ஜான்சன், B.E.,MBA.,M.Phil.,Ph.D**
**வேந்தர்**

**முனைவர் மேரி ஜான்சன், B.E.,MBA.,M.Phil.,Ph.D**
**நிறுவனத் தலைவர்**

**திருமதி மரியா பெர்னாடெட் தமிழரசி ஜான்சன்,**
**நிறுவனத் துணைத் தலைவர்**

## ஆதரவாளர்கள்

**முனைவர். டி. சசிபிரபா,M.E.,Ph.D**
**துணை வேந்தர்**

**சட்டப் பள்ளி மாதிரி வழக்காடு மன்ற கூட்டுநர்**
**முனைவர் தில்ஷாத் ஷேக் M.L.,M.B.A.,Ph.D**

**ஒருங்கிணைப்பாளர்**
**திருமதி பூஜாஸ்ரீ, M.L.,(Ph.D)**
**உதவிப் பேராசிரியர், சட்டப் பள்ளி**

# சத்யபாமா பல்கலைக்கழகம் பற்றி

வெற்றிகரமான மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு மதிப்புமிக்க நிறுவனம் எங்களுடைய சத்தியபாமா நிகர்நிலை பல்கலைக்கழகம். எங்கள் நிறுவனர் மற்றும் அதிபர், கர்னல்.முனைவர் ஜேப்பியாரின் ஆசீர்வாதத்துடன் மற்றும் முனைவர் மரியசீனா ஜான்சன், வேந்தர், முனைவர் மேரி ஜான்சன்,நிறுவனத் தலைவர் ஆகியோரின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், மற்றும் திருமதி மரியா பெர்னாடெட் தமிழரசி ஜான்சன், நிறுவனத் துணைத் தலைவரினாலும், என்ஐஆர்எஃப் தரவரிசையில் 2020 இல் எங்கள் மதிப்பிற்குரிய நிறுவனம் 39 வது இடத்தை பெற்றுள்ளது மற்றும் இது நம் நாட்டில் முதல் 50 பல்கலைக்கழகங்களுள் கடந்த 5 ஆண்டுகளாக இடம் பிடித்து வருகின்றது. சத்தியபாமா நிகர்நிலை பல்கலைக்கழகம் பல்வேறு பொறியியல் துறைகளில் பலதரப்பட்ட கல்வித் திட்டங்களான அதாவது, அறிவியல், தொழில்நுட்பம், சட்டம், கட்டிடக்கலை, மருந்தகம், நர்சிங், பல் மருத்துவம் மற்றும் மேலாண்மை போன்றவற்றை வழங்குகிறது. இது யுஜிசி சட்டம், 1956ன் - பிரிவு.3 இன் கீழ் நிறுவப்பட்டுள்ளது. நாட்டின் மதிப்புமிக்க நிறுவனத்தால் 'A' கிரேடுடன் அங்கீகாரம் என்ற அங்கீகார அமைப்பு, தேசிய அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டு அவையின் மூலம் பெற்றுள்ளது. கல்வித் துறையில் இடைவிடாமல் சமூகத்திற்கு சேவை செய்யும் பணியில், எங்கள் நிறுவனம் பல அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது, 2001 இல் நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து பெற்றது, NAAC ஆல் A தரத்துடன் அங்கீகாரம், QS-குவாக்குவரெல்லி சைமண்ட்ஸ் (QS) மற்றும் ஒட்டுமொத்தத்திற்கான QS I- கேஜ் டைமோண்ட் மதிப்பீடு மூலம் 4 நட்சத்திர மதிப்பீடு கிடைத்துள்ளது. டைம்ஸ் உயர் கல்வி ஆசிய பல்கலைக்கழகத்தில் 351+ இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ARIIA 2020 இல் இந்திய பல்கலைக்கழகங்களில் புதுமைக்கான தரவரிசை பட்டியலில் சத்யபாமா 5 வது இடத்தைப் பிடித்துள்ளது .சத்யபாமா ஒரு முன்னணி நிறுவனமாக உருவெடுத்து சர்வதேச தரத்திற்கு 49 இளங்கலை பட்டப்படிப்புகள், 21 உயர்கல்வி பட்டப்படிப்பு திட்டங்கள், ஆராய்ச்சி, தொழில்நுட்ப பசுமைக்குடில் , அறிவியலில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பம் மூலம் சிறந்துவிளங்குகிறது.

# சத்யபாமா சட்டப் பள்ளியைப் பற்றி

சத்தியபாமா சட்டப் பள்ளி சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலில் மையமாக இருக்க விரும்புகிறது. சட்டம் கற்பித்தல் மற்றும் சட்ட அறிவின் மூலம் மனித மாண்பு, சமூக நலன் மற்றும் நீதி ஆகியவற்றை மேம்படுத்துவதில் சட்டப் பள்ளி செயல்பட்டுவருகிறது. சட்டப் பள்ளி B.A.LL.B (hons), B.Com.LL.B (hons), B.B.A.LLB (hons) மற்றும் LL.B பட்டபடிப்புகளை வழங்குகிறது. எங்களது சட்டப்பள்ளி தரமான சட்டக்கல்வியை வழங்குவதாக சமீபத்திய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன ஆதலால் எங்களுடைய பாடத்திட்டங்கள் அர்ப்பணிப்புமிக்க, திறமையான மற்றும் கடின உழைப்புமிக்க ஆசிரியர்களல் மூலம் கற்பிக்கப்படுகின்றன, இந்த ஆசிரியர்களால் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பிற்குரிய நீதிஅரசர்களும் அடங்குவர். நாங்கள் சட்டத்தொழிலில் நெறிமுறைக்கொள்கை வாங்குபவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளுடனும் இனைந்து சட்டக்கல்வினை பயிற்றுவிக்கிறோம். இது நம்முடைய சட்ட மற்றும் சமூக-சட்ட ஆராய்ச்சியின் பல துறைகளில் அறிவின் வலிமையை பிரதிபலிக்கிறது. மேலும் இது எங்கள் மாணவர்களுக்கு சர்வதேச அளவில் மதிக்கப்படும் அறிஞர்களுடன் தொடர்பு கொள்ள மிகுந்த வாய்ப்பளிக்கிறது. எங்கள் பாடத்திட்டங்கள் மாணவர்களை சட்ட தொழிலில் மேன்படுத்துவதற்கும் ஒரு வலுவான அடித்தளத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முக்கிய பாடங்களில்,இளங்கலை பட்டப் படிப்புகளில் விருப்பப் பாடங்களைத் தொடர வாய்ப்புகள் உள்ளன. சட்டப் பள்ளியின் தனித்துவமான அம்சங்களில் ஒன்று தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க மாணவர்களை அனுமதிப்பது. கட்டாய மூட் போட்டிகள் மூலம் பெறப்பட்ட அறிவு, இக்கல்வி முறை சட்டம் மற்றும் சமூக ஸதா ஆராய்ச்சியில் ஸதா கல்வியின் வலிமையை பிரதிபலிக்கிறது. மேலும் இது எங்கள் மாணவர்கள் சர்வதேச அறிஞர்களுடன் தொடர்புகொள்ள மிகுந்த வாய்ப்பளிக்கிறது. இச்ச்சட்ட தொழிலுக்கு தேவையான சட்ட அறிவு,திறன்கள் மற்றும் குணங்களை பெறுவதற்கு எமது பள்ளி உதவுகிறது. இதன் மூலம் எங்களது மாணவர்கள் தங்களை மற்ற மாணவர்களிடம் இருந்து வேறுபடுத்திக்கொள்ள எங்களது சட்டப்பள்ளி உதவிபுரிகிறது.

# வழக்கின் பொருண்மை

## நடுமேட்டு கிராம நல சங்கம் -எதிர்- வளநாடு இன்னும் பிறர்

ஏறக்குறைய 2500 பேர் வசிக்கும் நடுமேடு என்ற கிராமம் வளநாடு என்ற இந்திய ஒன்றியத்தின் மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்த கிராமமானது கடலுக்கு சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புளியஞ்சோலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. சுமார் 750 மில்லிமீட்டர் வருட சராசரி மழை பொழிவு கொண்ட இந்த கிராமத்தின் சுற்றுப்பகுதிகளில் பெரும்பான்மையானோர் மானாவாரி மற்றும் கிணற்றுப் பாசன விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர்.

கிராமத்தின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் சின்னவல்லி குன்றுகள் அமைந்துள்ளதால் அந்தப் பகுதி வழியாக எந்தப் பாதையும் இல்லை. இந்த மலைப்பாங்கான பகுதிகளை ஆடு மாடு மேய்ப்பதற்கும் விறகொடிப்பதற்கும் கிராம மக்கள்பயன்படுத்தி வந்தனர். மலையில் காட்டுப் பூனைகள், முயல், மற்றும் நரிகள் உண்டு. கிராம மக்கள் முயலை வேட்டையாடி உண்பதும் உண்டு. மலையில் இருந்து ஓடிவந்த நீரானது ஊரின் தென்புறம் அமைந்துள்ள ஒரு சிறு குளத்தை சென்றடைந்து நடுமேட்டு வெள்ளதாரை வழியாக மாநிலத்தின் பெரிய ஆறான நல்லாற்றை சென்றடைகிறது.

இந்த குளமானது கிராமத்தின் முக்கியமான குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான நிலத்தடி நீராதாரமாக உள்ளது. குளத்தின் அருகே ஒரு சிறு கோயிலும் பழமையான கிணறு ஒன்றும் உள்ளது.

மாவட்ட தலைநகரான புளியஞ்சோலை மிகவும் வளர்ந்துவரும் நகரமாகும். இரண்டாம் கட்ட நகரங்களை வளர்த்தெடுக்கும் திட்டத்தின் கீழ் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று இங்கு வளர்ந்து வருகிறது. நகரின் குடிநீர் தேவைகள் நாளுக்கு நாள் பெருகி வரும் சூழலில் நல்லாற்று கூட்டு குடிநீர் திட்டம் ஒன்றை மாநில அரசு முன்னெடுத்தது. ஆனால் புளியஞ்சோலை மாவட்டம் நல்லாற்றின் கடைமடை பகுதியில் இருப்பதாலும், மாசு பிரச்சனைகளாலும், மற்றும் சில புவியியல்-தொழில்நுட்ப காரணங்களாலும் கூட்டுக்குடிநீர் திட்டமானது இன்னும் முழுமையாக முடிவுறவில்லை.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒன்றிய அரசானது 'பிரதான் மந்திரி வன் யோஜனா' என்ற திட்டத்தை முன்னெடுத்தது. (திட்டத்தின் முக்கியமான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் இணைக்கப்பட்டுள்ளன). மாவட்டத்தின் பிற பகுதிகளில் பெரிய அளவில் வனப்பகுதிகள் இல்லாததால், இந்தத் திட்டத்தின் கீழ் சின்னவல்லி குன்றுகளை கொண்டுவர மாநில அரசு முடிவு செய்தது. இதன்படி சின்னவல்லி குன்று பகுதிகளில் மயில் வகைகள் கொண்டுவந்து விடப்படும்.

குன்று பகுதிகளில் பெய்யும் மழை நீரானது மயில்களுக்கு உபயோகப்படும் வழியாக சேகரிக்கப்பட்டு, அதன் ஒரு பகுதி நேரடியாக புளியஞ்சோலை நகருக்கு கொண்டு செல்வதற்கு தகுந்தார்போல் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குன்றுகளில் மயில் வகைகளை அறிமுகப்படுத்தும் திட்டம் ஒரு மதிப்பான 'பன்னாட்டு தன்னார்வ வன தொண்டு நிறுவனத்தின்' வரைவாகும்.

ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்த வரைவை பன்னாட்டு தொண்டு நிறுவனம் முன்மொழியும் போதே ஊர் பொதுமக்கள் (பதிவுபெறாத) நடுமேட்டு கிராம நல சங்கம் என்ற பெயரில் அதை எதிர்த்து மாநில ஒன்றிய அரசுகளுக்கு கடிதங்கள் அனுப்பினார்கள். ஆனாலும் மாநில அரசு மக்களுடைய கடிதங்களை பரிசீலித்த பின் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதாக முடிவு செய்தது. ஆரம்பத்தில் மயில்கள் விவசாய நிலங்களை பாழாக்கும் என்று மட்டுமே நினைத்திருந்த விவசாயிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் நடுமேட்டின்குடிநீர் மற்றும் விவசாய ஆதாரங்களும் மாவட்ட தலைநகரம் செல்வதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றனர்.

இந்த வழக்கில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா குழுமமும், பன்னாட்டு தன்னார்வ வன தொண்டு நிறுவனமும் இணைந்து அரசு நிலைப்பாட்டை ஆதரித்தனர்.

உயர்நீதிமன்றம் மயில்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிராகவும் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவும் தீர்ப்பளித்தது. அரசு மற்றும் கிராம நல சங்கம் ஆகிய இரு தரப்பாருக்கும் இந்த தீர்ப்பு திருப்தியளிக்காத நிலையில் வழக்கானது உச்சநீதிமன்ற அமர்வின் முன் வாதிடப்படுகிறது.

## வழக்கெழு வினாக்கள்

1.பிரதான் மந்திரி வன் யோஜனா திட்ட கூறுகள் அரசியலமைப்பிற்கும், இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நாட்டிடை சட்டங்களுக்கும் எதிராக உள்ளதா?

2.பிரதான் மந்திரி வன் யோஜனா திட்ட கூறுகள் நடுமேட்டு மக்களின் வாழ்வாதார உரிமைகளை பறிக்கிறதா?

3.நல்லாற்று கூட்டு குடிநீர் திட்டம் நடுமேட்டு மக்களின் வாழ்வாதார உரிமைகளை பறிக்கிறதா?

## பிரதான் மந்திரி வன் யோஜனா

**செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் (Operational Guidelines)**

1. **வழிகாட்டுதல்களின் நோக்கம் மற்றும் நோக்கெல்லை**

**.... இந்திய வன வளத்தை மேம்படுத்துவது மற்றும் பாதுகாக்கப்பது என்ற அரசியல் சட்ட நோக்கத்திருக்காக மற்றும் இந்தியாவின் நாட்டிடை சட்ட கடப்பாடுகளை நிறைவேற்ற இந்த வழிகாட்டுதல்கள்.**

**....**

**....இந்த வழிகாட்டுதல்கள் பல்லுயிர், காடு மற்றும் வனவிலங்கு தொடர்பான சட்ட கட்டமைப்பிற்கு வலு சேர்க்கும் விதமாக முன்னெடுக்கப்படுகின்றன...**

**2. வழிகாட்டுதல்களின் குறிக்கோள்**

**.....**

**ஈ. தேசிய விலங்குகளை பாதுகாப்பதற்கான புதிய காடுகளை உருவாக்குத்தல்.**

**உ. தேசிய விலங்குகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை தற்போதுள்ள காடுகளை மேம்படுத்துவதன் மூலம் மேற்கொள்வது.**

**ஊ. ஒருங்கிணைத்த மரம், விலங்கு பாதுகாப்பில் கிராம, மற்றும் நகர நலன்களை மேம்படுத்துதல்**

**3......**

**4......**

5.முன்மொழிவுகளை பரிசீலித்தல்

அ. முன்மொழிவுகளை முன்னெடுப்பதை ஒன்றிய அரசு, மாநில அரசுகள், மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக நடைபெற வேண்டும்.

ஆ..

இ. பன்னாட்டு/தன்னார்வ அமைப்புகளின் முன்னெடுப்பை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் வழியாக நிறைவேற்ற ஊக்கப்படுத்தவேண்டும்.

ஈ. ...

உ ...

ஊ. வனங்களின் உயிரியல் பன்முகத்தன்மை, மீளுருவாக்கம் திறன், மற்றும் எதிர்காலத்தில், பொருத்தமான சுற்றுச்சூழல் பொருளாதார மற்றும் சமூக செயல்பாடுகளை மேற்க்கொள்ள ஏதுவாக முன்மொழிவுகள் இருக்க வேண்டும்.

6. செயல்படுத்தும் வழிகாட்டுதல்கள் (Implementation guidelines)

அ. முன்மொழிவுகள் தற்போது நடைமுறையில் இருக்கும் எந்த வள பயன்பாட்டையும் முழுமையாக மாற்றியமைக்க கூடாது.

ஆ..

இ. திட்டம் தொடர்பான தகவல் வன பயனர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்

ஈ. தேசிய விலங்குகளின்\உயிர்களின் காக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

உ ...

## விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

**I. வரையறைகள்:**

**பின் வரும் சொற்களுக்கான பொருள்:**

**1. ‘போட்டி’ கர்னல் முனைவர் ஜேப்பியார் முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப் போட்டி 2021 எனப் பொருள்படும்.**

**2. ’போட்டியின் விதிகள்’ போட்டியின் அதிகாரப்பூர்வ விதிகள் எனப் பொருள்படும் அவ்வப்போது திருத்தப்படதக்கது .**

**3. ‘IST’ இந்திய நிலையான நேரம் INDIAN STANDARD TIME எனப் பொருள்படும்.**

**4. ‘INR’ என்பது இந்திய ரூபாய் INDIAN RUPEES எனப் பொருள்படும்.**

**5. போட்டிகள்‘நாக்-அவுட் சுற்று’ அரையிறுதி மற்றும் இறுதி சுற்று எனப் பொருள்படும்.**

**6. ‘வாதுரை’ என்பது பங்கேற்கும் அணிகளின் மூலமாக சமர்ப்பிக்கப்படும் எழுத்துப்பூர்வமான குறிப்புக்கள் எனப் பொருள்படும்**

7. 'தமிழ் மாதிரி வழக்கு வாதப் போட்டியின் பொருண்மை' என்பது போட்டியின் அமைப்பாளர்கள் வெளியிடப்பட்ட பொருண்மை மற்றும் சிக்கல்கள் என அதன் விளக்கங்கள் மற்றும் எனப் பொருள்படும்.

8. 'ஏற்பாட்டுக் குழு' ஏற்பாட்டுக்குழு தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட குழு தன் அனைத்து அதிகாரங்களை பெற்று இருக்கும் எனப் பொருள்படும்.

9. 'அதிகாரப்பூர்வ மின்னஞ்சல்' கர்னல் முனைவர் ஜேப்பியார் முதலாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப் போட்டி 2021, அதாவது sslmootsociety@gmail.com அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் ஐடியாக எனப் பொருள்படும்.

## II. பொது விதிகள்:

### அ. தொகுத்தல் மற்றும் தகுதி

ஒவ்வொரு குழுவிலும் இரண்டு வழக்காடுபவர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் இருக்க வேண்டும்.

- நாடு முழுவதும் உள்ள இந்தியா வழக்கறிஞர் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட, சட்ட கல்லூரிகள், நிறுவனங்கள், சக மாணவர்கள் போட்டியில் பங்கேற்க தகுதியுடையவர்கள்.

அனைத்து பங்கேற்பாளர்களும் தற்போது சட்டத்தில் இளங்கலை பயின்று வரும் மாணவர்கள் , அதாவது. 3 ஆண்டு அல்லது 5 ஆண்டு படிப்புகள்.

•ஒரு கல்லூரியின் சார்பாக பங்கேற்க மாணவர்களின் எண்ணிக்கையில் எந்த ஒரு வரையறையும் இல்லை.

ஆ. சீருடை

பங்கேற்பாளர்கள் ,மாணவ வழக்கறிஞர்களுக்கு உரிய சீருடை அல்லது தங்களின் கல்லூரி சீருடை அணிந்திருந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கபடுவர்.

இ. நீதிமன்ற நடத்தை

பங்கேற்பாளர்கள் தங்களின் நடத்தை மற்றும் ஒழுக்கத்தை கடைபிடிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. வழக்கறிஞர் தொழிலுக்கு ஏற்ற வகையில் நடத்தை இருக்கவேண்டும். பங்கேற்பாளர்கள் கணியமாக முறையில் செயல்படவேண்டும் மற்றும் நீதி மன்றத்தை மதிக்கவேண்டும்,போட்டியில்பங்கேற்பவர்கள்,நீதிபதிகள், ஒருங்கிணைப்பாளர் குழுவை தவிர வேறு எந்த நபரும் போட்டியில் இடையூறு செய்தல் கூடாது ,மீறினால் அபராதம் விதிக்கப்படும்.

## ஈ.இணையவழி போட்டியின் முறை

இந்த போட்டியானது "zoom " என்ற செயலியின் மூலம் "மெய்நிகர்" பயன்முறையில் (virtualmode ) நடத்தப்படும்.

அனைத்து பங்கேற்பாளர்களும் இந்த zoom செயலியை பதிவிறக்கம் செய்து தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பங்கேர்ப்பாளர்கள் போட்டி நாள் அன்று சீரான இணைய தொடர்பு கொண்டிருக்கவேண்டும்
போட்டி நடைபெறும் போது இணைய துண்டிப்பு மற்றும் தொழில்நுட்பக்கோளாறு ஏதேனும் ஏற்பட்டால் ஒருங்கிணைப்பு குழுவானது எந்த பொறுப்பும் ஏற்காது.

போட்டியாளர்கள் தங்களின் வாதுரையை சமர்ப்பித்த பின்னர் அவர்களின் அணி குறியிட்டு எண் மின்னஞ்சல் மூலம் அவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

போட்டியாளர்கள் வாதாடும்போது அல்லது போட்டி நடக்கும் போது எந்தவித நேரங்களிலும் அவர்களின் அடையாளத்தையோ அல்லது அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ வெளிப்படுத்தும் வகையில் எந்தவித அடையாளத்தையும் பயன்படுத்த கூடாது.

ஒவ்வொரு வழக்காடுபவரும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே நீதிபதியுடன் கலந்துரையாட வேண்டும் .நீதிபதியிடம் வாய்மொழியாக மட்டுமே கலந்துரையாட வேண்டும்.
வழக்காடும் போது வாய்மொழி கலந்துரையாடலை தவிர வழக்கு தொடர்பான வேறு எவ்வித ஆவணங்களையும் திரையில் பகிர கூடாது.

வாய்மொழியாக வாதாடும் போது தங்களின் "காணொலி" (camera ) மற்றும் "கேட்பொலி"(MicroPhone)நீதிபதிகளுக்கு தெளிவாக தெரியும்படியும் ,கேட்கும்படியும் சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

போட்டியாளர்கள் அனைவரும் நீதிபதியுடன் கலந்து வாதாடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தங்கள் "கேட்பொலிகளை"(Micro Phone)சத்தமில்லாமல் (Mute) வைத்திருக்க வேண்டும்.

**போட்டியின் ஆய்வுப்பொருள்**

இந்த வாதுரை போட்டியின் முன்மொழி, முக்கியமாக அரசியலமைப்புமற்றும் சுற்றுசூழல் சட்டங்கள் அடிப்படையில் இருக்கும்.

**பதிவு செய்யும்முறை :**

பங்கேற்பாளர்கள் அணியின் விவரம் ,பாத்திரங்கள் மற்றும் கல்லூரி விவரம் இதை அனைத்தையும் sslmootsociety @gmail .com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின் அஞ்சலாக அனுப்பி அதன் மூலம் தற்காலிகமாக பதிவு செய்து கொள்ளலாம்.

தற்காலிக பதிவு வெற்றிகரமாக முடிந்தவுடன் ,அணிகள் தங்களின் முதன்மை பதிவை (Main Registration) செய்யவேண்டும்.

**தற்காலிக மற்றும் முதன்மை பதிவிற்கான தேதி**

**தற்காலிக பதிவு : sslmootsociety@gmail.com**

**முதன்மை பதிவு: https://forms.gle/gEwPV6gBhiiBCa9r6**

**<u>கூகிள் படிவத்தின் இணைப்பு:</u>**

**https://forms.gle/gEwPV6gBhiiBCa9r6**

**கூகிள் படிவத்தில் பங்கேற்பாளர்கள் தங்களின் கல்லூரி அடையாளஅட்டை அல்லது வேறு அடையாளஅட்டையை ,படிவத்தில் தனியாக அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில பதிவேற்ற படவேண்டும்**

**அணிகள் தங்களின் பதிவை 25.09.2021 அன்று இரவு 10:00 மணிக்குள் முடிக்க வேண்டும்**

**பதிவு கட்டணம் ரூ.2000**

**பதிவு கட்டணம் online banking மூலம் மட்டுமே செலுத்த வேண்டும் .மற்றும் பணம் செலுத்த்ப்பட்டதற்கான ஒப்புகை சீட்டை (Transaction Reciept ) கூகிள் படிவத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.**

**<u>வங்கி கணக்கின் விபரம்:</u>**

**<u>A/c எண்- 616546836</u>**

**<u>IFSC குறியீடு- IDIB000S201</u>**

**<u>கணக்கு வைத்திருப்பவரின் பெயர்- டாக்டர் தில்ஷாத் ஷேக்</u>**

**<u>அல்லது</u>**

**<u>கூகுள் பே எண்: 9849000331</u>**

கட்டணத்தை செலுத்தி கூகிள் படிவத்தை நிரப்புவதன் மூலம் முதன்மை பதிவு நிறைவடையும் பதிவு முடிந்து 24 மணி நேரத்திற்குள் ”வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டது” என்று ஒருங்கிணைப்பாளர் குழுவினரிடம் இருந்து மின் அஞ்சல் அனுப்பப்படும்.

செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணத்தை கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

<u>வாதுரை :</u>

போட்டியாளர்கள் தங்கள் வாதுரையை அன்று இரவு 11:59 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் .காலதாமதமாக சமர்ப்பிக்கும் போட்டியாளரின் வாதுரைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

<u>வாதுரையின் உள்ளடக்கம் :</u>

1 .அட்டைப்பக்கம்

2 .வழக்கின் பட்டியல்

3 .சொற்றொடரின் சுருக்கப்பட்டியல்

4 .நீதிமன்ற ஆளவரம்பு

5 .எழுவினாக்கள்

6 .சுருக்க வாதுரை

7 .விரிவான வாதுரை

8 .இறைஞ்சுதல்

**VI மதிப்பீடு :**

**வாதுரையின் மதிப்பீட்டின் அடிப்படை:**

| | | |
|---|---|---|
| 1. | சட்டத்தின் புரிதல் மற்றும் ஆராய்ச்சியின் தன்மை | 25 |
| 2. | சட்ட பகுப்பாய்வு மற்றும் தெளிவு | 20 |
| 3. | பொருண்மையின் அறிவு மற்றும் ஒருங்கிணைப்பு | 15 |
| 4. | யோசனைகளின் முன்னேற்றம் மற்றும் அதிகாரிகளின் பயன்பாடு | 15 |
| 5. | வாதத்தை விளக்கும் தன்மை மற்றும் மேற்கோள்களை கையாளும் விதம் | 15 |
| 6. | இலக்கணம் | 10 |
| | மொத்தம் | 100 |

**<u>போட்டியின் வடிவம்:</u>**

**இந்த போட்டி தகுதிச் சுற்று, கால் இறுதிச் சுற்று, அரை இறுதிச் சுற்று மற்றும் கால் இறுதிச் சுற்று கொண்டிருக்கும்.**

**தகுதிச் சுற்று:**

**தகுதிச்சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி / பிரதிவாதியாக வாதிடுவர்.**

**வாதி / பிரதிவாதி குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு அணியும்ஒவ்வொரு அணிகளை குழுக்கள் முறையில் சந்திப்பர்.**

**Whatsapp Group நிர்வாகிகளாக 'குழுஒருங்கிணைப்பாளர்கள்' இருப்பார்கள். போட்டியாளர்கள் உடன் தொடர்புகொள்ள வசதியாக, பதிவு செய்யும்போது அணிகள் கொடுத்த தொடர்பு எண்கள் கொண்டு இந்தWhatsapp Group உருவாக்கப்படும். குழு ஒருங்கிணைப்பாளர்கள் Whatsapp Group மூலம் போட்டிமுழுவதும் அணிகளுக்கு வழிகாட்டுவார்கள்.**

## தகுதிச் சுற்று:

தகுதிச் சுற்று இரண்டு சுற்றுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு சுற்றிலும் அணிகள் வாதி / பிரதிவாதியாக வாதிடுவர்.

வாதி / பிரதிவாதி குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு அணிகளை குழுக்கள் முறையில் சந்திப்பர்.

Whatsapp Group நிர்வாகிகளாக 'குழு ஒருங்கிணைப்பாளர்கள்' இருப்பார்கள். போட்டியாளர்கள் உடன் தொடர்பு கொள்ள வசதியாக, பதிவு செய்யும்போது அணிகள் கொடுத்த தொடர்பு எங்கள் கொண்டு இந்த Whatsapp Group உருவாக்கப்படும். குழு ஒருங்கிணைப்பாளர்கள் Whatsapp Group மூலம் போட்டி முழுவதும் அணிகளுக்கு வழிகாட்டுவார்கள்.

ஒவ்வொரு அணிக்கும் தலா 30 நிமிடங்கள் வழங்கப்படும். வாதுரையை சமர்ப்பிக்க, மறுப்புத் தெரிவிக்க / பதில் மறுப்புத் தெரிவிக்க கொடுக்கப்படுகின்ற நேரமாகும். வாதாடும் பொருள் அடிப்படையில் கூடுதல் நிமிடங்கள் வழங்கப்படும், இதை நீதிபதிகள் விருப்பப்படி நீடிக்கலாம், அதிகபட்சம் 5 நிமிடங்கள் வரை வாய்வழி வாதங்களுக்கு ஒதுக்கப்படும்.

தகுதிச் சுற்றுகள் முடிவுகள் அறிவித்தபின்னர் நீதிபதிகளின் முடிவு மட்டுமே இறுதியானது மற்றும் எந்த ஒரு சூழ்நிலையிலும் அந்த முடிவு மாற்றப்படாது. அதிகபட்ச பெரும் முதல் நான்கு அணிகள் அரை இறுதிச் சுற்றிற்கு செல்லும்.
வாதுரையின் மதிப்பெண்கள் மற்றும் வாதங்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண்கள் ஒவ்வொன்றும் 50% எடுத்துக்கொள்ளப்படும்.
இருஅணிகளும் சமநிலையில் இருந்தால், அதிகஒட்டுமொத்த மதிப்பெண் பெற்ற அணி அடுத்த சுற்றிற்கு அனுமதிக்கப்படுவர்.

## கால் இறுதிச் சுற்று:

எட்டு (8) அணிகள் கால் இறுதிச்சுற்றிற்கு முன்னேறும், இது Knock-out முறையில் தேர்ந்தெடுக்கப்படும்.குழுநிலைகள் குலுக்கள் முறையில் தீர்மானிக்கப்படும்.
ஒவ்வொருதரப்பினரும் தங்கள் வாதங்களை முன்வைக்க 30 நிமிடங்கள் கொடுக்கப்படும். எந்தவொரு பேச்சாளரும் 25 நிமிடங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் உரையாற்ற அனுமதிக்கப்படுதில்லை, இது மறுப்பு அல்லதுஎதிர் மறுப்புக்கான நேரத்தைஉள்ளடக்கியதாகும்.

ஒவ்வொரு நீதிமன்ற அறையில் இருந்தும் வெற்றியாளர் அரை இறுதிச் சுற்று செல்வார். சமநிலை ஏற்பட்டால், அணியின் வாதுரை மதிப்பெண் பரிசீலிக்கப்படும். ஒவ்வொரு அணிக்கும் எதிர் அணியின் வாதுரைகள் மின்னஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்யப்படும்.

**அரை இறுதிச் சுற்று:**

நான்கு (4) அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும், அவை Knock-out முறையில் தேர்ந்தெடுக்கப்படும்.

குழுநிலைகள் குலுக்கள் முறைமூலம் தீர்மானிக்கப்படும்.

ஒவ்வொருதரப்பும் தங்கள் வாதங்களை முன்வைக்க அதிகபட்சம் 45 நிமிடங்கள் ஒதுக்கப்படும். இது மறுப்பு அல்லதுஎதிர் மறுப்புக்கான நேரத்தைஉள்ளடக்கியதாகும்.

அதிகபட்சம் மறுப்புக்கான நேரம் 5 நிமிடங்கள் மற்றும் எதிர்மறுப்புக்கான அதிகபட்ச நேரம்2 நிமிடங்கள் ஆகும்.

ஒவ்வொரு நீதிமன்ற அறையில் இருந்தும் வெற்றியாளர் இறுதிச் சுற்று செல்வார். சமநிலை ஏற்பட்டால், அணியின் வாதுரை மதிப்பெண் பரிசீலிக்கப்படும். ஒவ்வொரு அணிக்கும் எதிர் அணியின் வாதுரைகள் மின்னஞ்சல் மூலம் பரிமாற்றம் செய்யப்படும்.

**இறுதிச் சுற்று:**

அரை இறுதிச் சுற்றிற்கான கால அவகாசம் இந்த சுற்றிலும் கடைபிடிக்கப்படும்.

மறுப்பு மற்றும் எதிர்-மறுப்புகளுக்கு அதிகபட்சம் ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

**அபராதம் :**

அபராதமானது எதிர்முறை மதிப்பெண்களாக பின்வருமாறு வழங்கப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் வாதுரையை சமர்ப்பிக்க தவறினால் தலா ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 1 மதிப்பெண் குறைக்கப்படும்.

தவறான அட்டைக்கு 1 மதிப்பெண் தலா ஒரு வாதுரைக்கு குறைக்கப்படும்.

கொடுக்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை மீறினால் 1 மதிப்பெண் தலா ஒரு கூடுதல் பக்கத்திற்கு குறைக்கப்படும் .அதிகபட்ச பக்கஎண்ணிகை 30 ஆகும்.

கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தை பின்பற்றாமலோ / தேவையற்ற உள்ளடக்கத்தை சேர்ந்தாலோ 1 மதிப்பெண் குறைக்கப்படும்.

வாய்வழி வாதங்களின் ஆணை வாய்வழி வரிசை பின்வருமாறு:

வாதி 1
வாதி 2
பிரதிவாதி 1
பிரதிவாதி 2
வாதியின் மறுதொடக்கம்
பிரதிவாதியின் துணை மறுத்தளிப்பு

வாதி மறுப்புக்கு எழும்பவில்லை என்றால் பதில்-மறுப்பு ரத்து செய்யப்படுவதாக கருதப்படுகிறது

இதர

நீதிமன்றம் தொடர்பான விதிகளை அமல்படுத்துதல் மற்றும் விளக்குவது தொடர்பான இறுதி முடிவு ஒருங்கிணைப்பாளர் குழுவிடம் உள்ளது.

ஏதேனும் சர்ச்சைகள் ஏற்பட்டால், அமைத்தல் குழுவின் முடிவே இறுதியானது.
இந்த வழக்கு வாதப் போட்டியின் தொழில்நுட்ப தன்மை காரணமாக, புதிய சிக்கல்கள் வெளிப்படும், எனவே ஏதேனும் ஒரு விஷயத்தில் முடிவு எடுக்கும் உரிமையை அமைத்தல் குழு பாதுகாக்கிறது சுற்றுகளின் போது சிக்கல் எழுந்தாலும் அனைத்து மாற்றங்களும் தகவல் தெரிவிக்கப்படும் முன்கூட்டியே பங்கேற்பாளர்கள்.

**வாய்வழி வாதங்களை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை:**

| | | |
|---|---|---|
| 1. | சட்ட அறிவு | 20 |
| 2. | சட்டத்தின் பயன்பாடு | 20 |
| 3. | புத்திசாலித்தனம் & கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறன் | 15 |
| 4. | நீதிமன்ற நடத்தை | 15 |
| 5. | வாதங்கள் எடுத்தியம்பும் பாணி | 10 |
| 6. | நேர மேலாண்மை | 10 |
| 7. | ஒருங்கிணைப்பு & குழு வேலை | 10 |
| | மொத்தம் | 100 |

## VIII. விருதுகள்

**1. வெற்றியாளருக்கு ரூ 10,000 மற்றும் தகுதிச்சான்றிதழ்.**

**2. இரண்டாம் இடம் பெற்றவர்க்கு ரூ 5,000 மற்றும் தகுதிச்சான்றிதழ்.**

**3. சிறந்த மாணவர் (ஆண்) வழக்கறிஞர்: ரூ. 2,000 மற்றும் தகுதிச் சான்றிதழ்.**

**4. சிறந்த மாணவர் (பெண்) வழக்கறிஞர்: ரூ. 2,000 மற்றும் தகுதிச் சான்றிதழ்.**

**5. சிறந்த வாதுரைக்கு: ரூ. 3000 மற்றும் தகுதிச் சான்றிதழ்.**

**6. பங்கேற்புக்கான சான்றிதழ்: பங்கேற்புக்கான இ-சான்றிதழ் வாதுரையை சமர்ப்பிக்கும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் வழங்கப்படும் .**

## தொடர்புக்கு

மின்னஞ்சல்: sslmootsociety@gmail.com

## ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்

திருமதி பூஜாஸ்ரீ, M.L.,(Ph.D), உதவிப் பேராசிரியர்,
+91 99400 55807

## போட்டியின் ஒருங்கிணைப்பாளர்கள்

1. பா. சு. ஆரியா அபரஞ்சி - வழக்கு வாத குழு தலைவர்
2. சோ. கீ. ஈஷ்வா - வழக்கு வாத குழு துணைத்தலைவர்
3. வே. ஜான்சி - IV வருட - B.B.A.LLB(Hons)
4. இரா. சி.கனிமொழி - III வருட - B.Com.LLB(Hons)
5. பா. சிந்தியா ஜெனிபர் - III வருட - B.B.A.LLB(Hons)
6. தே. சுவீட்டி பெட்ரிஷ்யா - III வருட - B.B.A.LLB(Hons)
7. ஜெ. ஜனார்த்தனன் - III வருட - B.B.A.LLB(Hons)
8. ப. சினேகா - II வருட - B.B.A.LLB(Hons)
9. இரா. மகிழ்வா - II வருட - B.A.LLB(Hons)
10. க. ஸ்ரீஹரிஹரன் - II வருட - B.A.LLB(Hons)
11. ச. சுஜிதா - II வருட - B.A.LLB(Hons)
12. பா. ஆகாஷ் ம்ரித்துவின் - II வருட - B.A.LLB(Hons)
13. வே. நீரஜா ச ரெட்டி - II வருட - B.A.LLB(Hons)
14. செ. யோகவர்ஷினி - II வருட - B.A.LLB(Hons)
15. ரா. காயத்ரி - II வருட - B.Com.LLB(Hons)

## போட்டியில் பதிவு செய்ய:

**தற்காலிக பதிவு:** sslmootsociety@gmail.com

**இறுதி பதிவு:** https://forms.gle/priQGD6gmq2BcM2e6

**மேலும் தொடர்புக்கு:** 95000 44929 / 63835 50954 / 93604 23243

# போட்டியின் முக்கிய நிகழ்வுகள்

| எண் | தேதி | நிகழ்வுகள் |
|---|---|---|
| 1. | 15.08.21 | பொருண்மை வெளியீடு |
| 2. | 30.08.21 | தற்காலிக பதிவின் இறுதி நாள் |
| 3. | 25.09.21 | போட்டியின் கட்டணம் மற்றும் பதிவு செய்ய இறுதி நாள் |
| 4. | 06.10.21 | வாதுரையை சமர்ப்பிக்க கடைசி நாள் |
| 5. | 07.10.21 | போட்டியின் தொடக்க விழா, குழுக்கள் முறை மற்றும் வாதுரையை பரிமாற்றம் செய்தல் |
| 6. | 08.10.21 | தகுதிச்சுற்று மற்றும் காலிறுதிச்சுற்று |
| 7. | 09.10.21 | அரை இறுதி, இறுதி சுற்று மற்றும் போட்டியின் விடைவு விழா |